சுருக்கம்

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை– கல்வி – விடுதிகள் – விடுதிகளில் பணியாற்றும் 1242 பகுதி நேர துப்புரவுப் பணியாளர்களுக்கு வழங்கப்படும் தொகுப்பூதியத்தை ரூ.2000/–லிருந்து ரூ.3000/–ஆக உயர்த்தி வழங்குதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர்
நலத் (சிந.ஆபி 2) துறை

அரசாணை (நிலை) எண். 58

நாள் 11.10. 2017
திருவள்ளுவர் ஆண்டு 2048
ஹேவிளம்பி, புரட்டாசி 25

படிக்கப்பட்டது:

1. அரசாணை (நிலை) எண்.83, பிற்படுத்தப்பட்டோர்,மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை, நாள் 26.06.2012.
2. அரசாணை (நிலை) எண்.134,பிற்படுத்தப்பட்டோர்,மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை, நாள் 28.11.2012.
3. அரசாணை (நிலை) எண்.135,பிற்படுத்தப்பட்டோர்,மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை, நாள் 28.11.2012.
4. அரசாணை (நிலை) எண்.99,பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை, நாள் 25.10.2013.
5. அரசாணை (நிலை) எண்.23,பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை, நாள் 26.02.2014.
6. அரசாணை (நிலை) எண்.27,பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை, நாள் 31.03.2015.
7. அரசாணை (நிலை) எண்.63,பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை, நாள் 26.11.2015.
8. அரசாணை (நிலை) எண்.11,பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை, நாள் 27.01.2016.
9. அரசாணை (நிலை) எண்.19,பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை, நாள் 08.02.2016.
10. பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை ஆணையரின் கடித எண்.பி1/1435/2017, நாள் 19.06.2017.

-------

ஆணை:

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் நல விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவ, மாணவியரின் சுகாதாரத்தைக் கருத்தில் கொண்டும், விடுதிகளை தூய்மையாகப் பராமரிப்பதன் அவசியத்தைக் கருதியும் 100 மாணவ/ மாணவியருக்கு மேல் தங்கிப் பயிலும் 66 விடுதிகளுக்கு விடுதி ஒன்றுக்கு ஒரு முழு நேர துப்புரவு பணியாளர் வீதம் 66 துப்புரவு பணியாளர்களை சிறப்பு காலமுறை ஊதிய விகிதமான ரூ.2500–5000+ தரஊதியம் ரூ.500/– என்ற விகிதத்திலும், 100 மாணவ, மாணவியருக்கும் குறைவாக உள்ள 1170 விடுதிகளுக்கு விடுதி ஒன்றுக்கு ஒரு துப்புரவு பணியாளர் வீதம் 1170 பகுதி நேர துப்புரவு

பணியாளர்களை மாதம் ஒன்றுக்கு ரூ.2000/– என்ற தொகுப்பூதிய விகிதத்திலும் பணியில் அமர்த்தும் வகையில் மொத்தம் 1236 பணியிடங்களை (சிறப்பு ஊதிய விகிதத்தில் 66 முழு நேர துப்புரவு பணியாளர் பணியிடங்கள் மற்றும் தொகுப்பு ஊதிய முறையில் 1170 பகுதி நேர துப்புரவு பணியாளர் பணியிடங்கள்) தோற்றுவித்து ஆணையிடப்பட்டது.

2. மேலே இரண்டு முதல் ஒன்பது வரை படிக்கப்பட்ட அரசாணைகளின்படி புதிதாக துவங்கப்பட்ட 72 விடுதிகளில் ரூ.2000/– தொகுப்பூதியத்தில் 72 துப்புரவுப் பணியாளர் பணியிடங்கள் தோற்றுவித்து ஆணையிடப்பட்டது.

3. 2017–2018–ஆம் ஆண்டு மானியக் கோரிக்கை விவாதத்தின் போது, "பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறையின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கி வரும், 100 மாணவ, மாணவியர் வரை தங்கிப் பயிலும் 1,242 விடுதிகளில் பணிபுரியும் பகுதி நேர துப்புரவு பணியாளர்களுக்கு, தற்போது வழங்கப்படும் மாதாந்திர தொகுப்பூதியம் ரூ.2,000/–லிருந்து ரூ.3,000/–ஆக உயர்த்தி வழங்கப்படும். இதற்காக ஆண்டு ஒன்றுக்கு கூடுதலாக 1 கோடியே 49 இலட்சத்து 4 ஆயிரம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும்'' என்று மாண்புமிகு அமைச்சர் (பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலன்) அவர்களால் அறிவிக்கப்பட்டது.

4. அதனையடுத்து, அரசாணை (நிலை) எண்.26, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை, நாள் 01.03.2016–ன் மூலம் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை விடுதிகளில் பகுதிநேர துப்புரவாளர்களாக இருக்கும் பணியாளர்களின் தொகுப்பூதிய சம்பளம் ரூ.2000/–லிருந்து ரூ.3000/– ஆக உயர்த்தப்பட்டுள்ளது என்று தெரிவித்து, பத்தி 1 மற்றும் 2–ல் கண்டுள்ள பணியிடங்கள் பகுதிநேர துப்புரவு பணியிடங்களாக இருந்தாலும் இப்பணியிடங்கள் யாவும் வேலை வாய்ப்பகம் மூலம் நிரப்பப்பட்டு வருவதால், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையிலுள்ள விடுதிகளில் பணிபுரியும் பகுதிநேர துப்புரவு பணியாளர்களின் தொகுப்பூதியம் உயர்த்தப்பட்டதை போன்றே பிற்படுத்தப்பட்ட, மிகப்பிற்படுத்தப்பட்ட, சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் நல விடுதிகளில் ரூ.2000/– தொகுப்பூதியத்தில் பணிபுரியும் 1242 பகுதிநேர துப்புரவாளர்களின் ஊதியத்தினை ரூ.2000/–லிருந்து ரூ.3000/– ஆக உயர்த்தலாம் எனவும் பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையர் தெரிவித்து இதனால் ஆண்டு ஒன்றுக்கு கூடுதலாக ஏற்படும் செலவினமான ரூ.1,49,04,000/–க்கு ஒப்பளிப்பு வழங்கிடுமாறு கோரியுள்ளார்.

5. மானியக் கோரிக்கை அறிவிப்பின் அடிப்படையில், பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையரின் செயற்குறிப்பினை அரசு நன்கு ஆய்வு செய்து ஏற்கனவே மேலே 1 முதல் 9 வரை படிக்கப்பட்ட அரசாணைகளில் அரசால் ஒப்பளிப்பு செய்யப்பட்ட 1242 பகுதி நேர துப்புரவுப்பணியாளர் பணியிடங்களுக்கான மாதாந்திர தொகுப்பூதியத்தை இவ்வரசாணை வெளியிடப்படும் நாள் முதல் ரூ.2,000/–லிருந்து ரூ.3000/–ஆக உயர்த்தி வழங்கிட அரசு ஆணையிடுகிறது.

6. மேலே பத்தி 5–ல் அனுமதிக்கப்பட்ட செலவினம் கீழ்க்காணும் கணக்குத் தலைப்புகளின் கீழ் பற்றுவைக்கப்பட வேண்டும்:–

i) <u>பிற்படுத்தப்பட்டோர் நலன்:</u>

"2225 ஆதி திராவிடர், பழங்குடியினர், ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சிறுபான்மையினர் நலன் – 03 பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் – 277 கல்வி – மாநிலச் செலவினங்கள் – AA பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மாணவர் இல்லங்கள் – 33 தொழில்முறை, சிறப்புப் பணிகளுக்குத் தொகை கொடுத்தல் – 04 ஒப்பந்த ஊதியம். (த.தொ.கு. 2225 03 277 AA 3344)"

ii) <u>மிகப்பிற்படுத்தப்பட்டோர் நலன்:</u>

"2225 ஆதி திராவிடர், பழங்குடியினர், ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சிறுபான்மையினர் நலன் – 03 பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் – 277 கல்வி – மாநிலச் செலவினங்கள் – BC மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மாணவர் இல்லங்கள் – 33 தொழில்முறை, சிறப்புப் பணிகளுக்குத் தொகை கொடுத்தல் – 04 ஒப்பந்த ஊதியம்.
(த.தொ.கு. 2225 03 277 BC 3349)"

iii) <u>மிகப்பிற்படுத்தப்பட்டோர் நலன்:</u>

"2225 ஆதி திராவிடர், பழங்குடியினர், ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சிறுபான்மையினர் நலன் – 03 பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் – 277 கல்வி – மாநிலச் செலவினங்கள் – KA மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மாணவரில்லங்கள் – 33 தொழில்முறை, சிறப்புப் பணிகளுக்குத் தொகை கொடுத்தல் – 04 ஒப்பந்த ஊதியம்.
(த.தொ.கு. 2225 03 277 KA 3344)"

iv) <u>சீர்மரபினர் நலன்:</u>

"2225 ஆதி திராவிடர், பழங்குடியினர், ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சிறுபான்மையினர் நலன் – 80 பொது – 101 சீர்மரபினர் மற்றும் ஏனைய நாடோடி இனத்தவர் நலன் – மாநிலச் செலவினங்கள் – AF சீர்மரபினர் மாணவர் இல்லங்களும் உணவு இல்லங்களும் – 33 தொழில்முறை, சிறப்புப் பணிகளுக்குத் தொகை கொடுத்தல் – 04 ஒப்பந்த ஊதியம்.
(த.தொ.கு. 2225 80 101 AF 3342)"

v) <u>சிறுபான்மையினர் நலன்:</u>

"2225 ஆதி திராவிடர், பழங்குடியினர், ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சிறுபான்மையினர் நலன் – 04 சிறுபான்மையினர் நலன் – 277 கல்வி – மாநிலச் செலவினங்கள் – JB சிறுபான்மையினர் மாணவரில்லங்கள் – 33 தொழில்முறை, சிறப்புப் பணிகளுக்குத் தொகை கொடுத்தல் – 04 ஒப்பந்த ஊதியம்.
(த.தொ.கு. 2225 04 277 JB 3342)"

7. மேலே பத்தி 5–ல் அனுமதிக்கப்பட்ட கூடுதல் செலவினத்திற்கு இறுதி திருத்த நிதியொதுக்கம் / துணை மானியக் கோரிக்கைகளில் நிதி ஒதுக்கீடு கோரி கருத்துருவை தனியே அரசுக்கு அனுப்பிவைக்குமாறு பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையர் கேட்டுக்கொள்ளப் படுகிறார்.

8. இவ்வரசாணை நிதித்துறையின் இசைவினை அதன் அ.சா.எண்.50195/பி,மி.பி/2017, நாள். 11.10.2017–ல் பெற்று வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ஆ. கார்த்திக்
அரசு செயலாளர்

பெறுநர்
ஆணையர், பிற்படுத்தப்பட்டோர் நலன், சென்னை–5.
ஆணையர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலன், சென்னை–5.
ஆணையர், சிறுபான்மையினர் நலன், சென்னை–2.
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்.

அனைத்து மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும்
சிறுபான்மையினர் நல அலுவலர்கள்.
அனைத்து மாவட்ட கருவூல அலுவலர்கள்.
சம்பள கணக்கு அலுவலர் (வடக்கு),சென்னை –01.
சம்பள கணக்கு அலுவலர், மதுரை.
மாநில கணக்காயர், சென்னை–18/35.

<u>நகல்</u>

மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை–9.
மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை
அமைச்சரின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.
நிதித் (பி, மி.பி.) துறை, சென்னை–9.
அரசு செயலாளர் (பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும்
சிறுபான்மையினர் நலத் துறை) அவர்களின்
முதுநிலை தனிச்செயலாளர், சென்னை–9.
அரசு கூடுதல் செயலாளர் (பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர்
மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை) அவர்களின்
நேர்முக எழுத்தர், சென்னை–9.
இருப்புக் கோப்பு / உபரி நகல்

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்